கண் வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யும் கண்ணாடி கலைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்ணாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 3-50

S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580, HOSPITAL ROAD, NEAR BANK OF CEYLON JAFFNA.

கடகம் 5: பிரமோதூத ஆடி ஆனி 28 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹுஃதா பிறை 18 (12-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 139

★ வல்வை கடற் பரப்பில் வைத்து

ஸ்ரீலங்கா யுத்தக் கப்பல் மீது தற்கொலைப்படை தாக்குதல்!

மேஜர் காந்தரூபன்

கப்டன் விநோத்

கப்டன் கொலின்ஸ்

பல கடற்படையினர் உயிரிழப்பு கரும்புலிகள் மூவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படை ஒன்றின் மீது விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவான கரும்புலிகள் நேற்று முன்தினம் (செவ்வாய்) இரவு பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலினால் யுத்தக் கப்பல் பெரும் சேதமுற்றது. அதிலிருந்த கடற்படைச் சிப்பாய்கள் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

தாக்குதலை நடத்திய மூன்று கரும்புலிகளும் வீரமரணமடைந்தனர்.

கடற்புலிகளும், அப்பிரிவைச் சேர்ந்த கரும்புலிகளும் சேர்ந்து செவ்வாய் இரவு 10 15 மணியளவில் இத்தாக்குதலை நடத்தினர்.

கரும்புலிகள் படையைச் சேர்ந்த மேஜர் காந்தரூபன் (கோணேஸ்வரன் – வல்வெட்டித்துறை), கப்டன் விநோத் (வேலுப்பிள்ளை தியாகராஜா –வல்வெட்டித்துறை), கப்டன் கொலின்ஸ் (பர்னாந்து சில்வெஸ்டர் – மன்னார்) ஆகிய மூவரும் வெடிமருந்துகள் நிரம்பிய படகு ஒன்றைக் கொண்டு சென்று யுத்தக் கப்பல் மீது மோதி வெடிக்க வைத்தனர்.

இதனால் அக்கப்பல் பெரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

அப்ப இனி உவையள் கடலிலை நிக்கவும் தொடை நடுங்குவினம் எண்டு சொல்லுங்கோ...

மாகாண சபைக்குத் தேர்தல்! 25ஆம் திகதி முதல் வேட்புமனு

கொழும்பு, ஜூலை 12

வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடக்கப் போகிறது! அதற்கு முன்னேற்பாடாக இம்மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது!!

இது சம்பந்தமான அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டீ சில்வா நேற்று விடுத்தார்.

அந்த அறிவித்தலின் பிரகாரம் —

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு நிர்வாக மாவட்டங்களிலும் உள்ள கச்சேரிகளில் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமையில் இருந்து நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அடுத்த மாதம் முதலாம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

விமானக் குண்டுவீச்சினால் வாகரையில் 6 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 12

நேற்றுமுன் தினம் நண்பகல் ஒரு மணியளவில் மட்டக்களப்பு வாகரையில் இரண்டு போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இரண்டு பெண்கள், இரண்டு குழந்தைகள் உட்பட ஆறு பொது மக்கள் இந்தத் தாக்குதலில் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்பகுதியில் இருந்த அரசு மருத்துவமனை மற்றும் கோவில் ஆகியனவும் பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

பல்கலை. மாணவர் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

பல்கலைக்கழக மாணவர் கைது, பொருளாதாரத்தடை, ஆகியவற்றைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினர்.

மட்டக்களப்பில் இருந்து பஸ்ஸில் வந்த மாணவர்கள் தொடர்பாகவும், வெளி மாவட்டங்களில் கைதாகும் மாணவர்களை விடுதலை செய்வது தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகள் நடவடிக்கை எதனையும் எடுக்காததைக்கண்டித்தும்–

யாழ். மாவட்டத்துக்கு வேண்டுமென்று பொருளாதாரத்தடை ஏற்படுத்தியுள்ளதைக் கண்டித்தும்–

இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

பல்கலைக்கழக மாணவ.

(4 ஆம் பக்கம் பார்க்க)

பலாலித் தாக்குதலில் நான்கு சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 12

நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை பலாலியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் நான்கு சிப்பாய்கள் பலியாகினர்.

செவ்வாய் நண்பகல்ஒரு மணியளவில் பலாலி முகாமிலிந்து வெளியேற இராணுவத்தினர் முற்பட்டனர்.

அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் தங்கள் நிலைகளிருந்து முன்னேறிச் சென்று தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரமரணமடைந்த போராளி சீனிவாசனுக்கு (சுன்னாகம்) விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைச் செலுத்தி உள்ளனர். (அ-9)

உணவுப் பொருள் லொறிகள் மதவாச்சி நோக்கிப் புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 12

கொழும்பில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றைஏற்றிக்கொண்டு நேற்றுக் காலை 12 லொறிகள் செஞ்சிலுவைச்சங்கஉதவியுடன் மதவாச்சி நோக்கிப் புறப்பட்டன.

மதவாச்சியில் வைத்து இந்தப் பொருள்களை ஏற்றி வருவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து 12 லொறிகள் நேற்றுக் காலை 7 30 மணிக்கு மதவாச்சி நோக்கிச் சென்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட லொறிகள் நேற்று இரவு மடுவில் தங்கி இன்று காலை மதவாச்சியை அடைய ஏற்பாடாகி இருந்தது.

கொழும்பில் இருந்து மதவாச்சி வரும் லொறிகளில் வரும் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற லொறிகளில் மதவாச்சியில் வைத்து ஏற்றப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை இந்த லொறிகள் பொருள்களுடன் யாழ்ப்பாணம் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட லொறிகள் யாழ் செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்துக்கு முன்னால் இருந்து புறப்பட்டன.

லொறிகளுடன் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

37 தொன் மா, 18 தொன் சீனி வடக்கே வருகின்றன

வடக்கிற்கு அனுப்புவதற்கு என நேற்று கொழும்பிலிருந்து மதவாச்சி நோக்கிப் புறப்பட்ட லொறிகளில் அரிசி, மா, சீனி, திரிபோஷா, பால் மா வகைகள், மற்றும் மருந்துப் பொருள்கள் ஆகியன ஏற்றப்பட்டிருந்தன.

ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி, 37 மெட்ரிக் தொன் மா, 18 மெட்ரிக் தொன் சீனி, திரிபோஷா, விட்டாஸ் பிறே, லக்ஸ்பிறே மற்றும் தேவையான மருந்து வகைகள் லொறிகளில் அனுப்பப்பட்டிருக்கின்றன. (உ-எ)

கிழக்கில் தமிழ் இளைஞரை படுகொலை செய்யும் "பிரா"

பாரிஸ், ஜூலை 12

அரசுக்கு ஆதரவான "பிரா" என்ற கொலைப் படையினர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அப்பாவித் தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்து சடலங்களை அடையாளம் காணமுடியாதவாறு எரித்து வருகின்றனர்.

மட்டக்களப்பில் அகற்றப்படாத ஐந்து சடலங்களை நாய்களும் காகங்களும் உண்பதைத் தாம் நேரில் பார்த்ததாக ஏ. எப். பி. செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்தச் சடலங்கள் மீது விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை வசைபாடு வசனங்கள் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஏ.எப் பி. செய்தியாளரின் கடுரைச் சுருக்கம் நாளைய உதயனில்)

ஈழத் தமிழர் படுகொலையை நிறுத்தக்கோரி

இலங்கைத் தூதரகம் முன் சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 12

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரி நேற்று சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் தலைமையில் எட்டு அரசியல் கட்சிகளின் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கைத் துணை ஹைகமிஷனர் திரு பாஸ்குவலிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மனு ஒன்றை கையளித்தனர். (உ-எ)

45எம்.பிக்கள், 55எம்.எல்.ஏக்கள் நேற்றைய மகஜரில் கையொப்பம்

சென்னை, ஜூலை 12

சென்னையில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பட்டத்தின் பின்னர் இலங்கைத் துணைத் தூதரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் 45 எம். பிக்களும், 55 எம். எல். ஏக்களும் கையெழுத்திட்டு இருந்தனர்.

இந்த மகஜரில் அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி எம். பி திரு. தா. பாண்டியன், முஸ்லிம் லீக் சமது பிரிவின் தலைவர் ஏ. கே. அப்துல் சமது, முன்னாள் அமைச்சர்கள் மரகதம் சந்திரசேகர், எஸ். மாதவன், கே. ஏ. கிருஷ்ணசாமி, கே. காளிமுத்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

12-7-90
வியாழக்கிழமை ஆவி 28
சுபநேரம்!
07-29— 08-59
இராகுகாலம்
01-29—02-59

கொக்காவில் முகாம் மீது நேற்று பெண் புலிகள் கடும் தாக்கு!

நான்கு சிப்பாய்கள் பலி

பச்சிலைப்பள்ளி, ஜூலை 12

கொக்காவில் இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை பெரும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளே இந்தத் தாக்குதலை நடத்தினர்.

தாக்குதலில் இராணுவத் தரப்பில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் 9 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் அரசதரப்பில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் பெண் போராளிகள் மூவர் மரணமடைந்தனர். சிலர் காயமுற்றனர்.

தாக்குதல் தொடர்ந்து கொண்டிருந்த வேளை ஆறு பொம்மர்களும், 4 ஹெலி கொப்டர்களும் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று இரவும் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன.

இறந்த பெண் போராளிகளின் சடலங்கள் நேற்று மாலையில் யாழ். நகரிலுள்ள மக்களிர் படைப் பிரிவு முகாம் ஒன்றில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. [அ-117-9]

இலங்கைத் தமிழர் இன்னல்கள்: வி. பி. சிங்குடன் கருணாநிதி தொலைபேசியில் பேசுவார்

திருச்சி, ஜூலை 12

இலங்கைத் தமிழருக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்தும்–

தமிழகத்துக்குப் பெரும் எண்ணிக்கையில் வரும் இலங்கைத் தமிழ் அகதிகளால் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் குறித்தும்–

இன்று வியாழக்கிழமை பிரதமர் வி. பி. சிங்குடன் முதலமைச்சர் கருணாநிதி தொலைபேசியில் பேச விருக்கிறார்.

இத்தகவலை திரு. கருணாநிதியே நேற்று திருச்சியில் செய்தியாளரிடம் வெளியிட்டார்

(3 ஆம் பக்கம் பார்க்க)

தண்ணீரூற்றில் ஹெலித்தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 12

முல்லைத்தீவு தண்ணீரூற்றில் நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் 2வீடுகள் முற்றாகச் சேதமுற்றன. பொதுமக்கள் இருவர் காயமுற்றனர். (உ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

இறைச்சிக் கோழி

இறைச்சிக்கு உகந்த சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு விலை குறைக்கப்பட்டுள்ளது சற்குணராஜா & 'பிரதர்ஸ்' பிரம்படி லேன், கொக்குவில். (13596)

வழமையான சேவை

றபர் சீல், பிளாஸ்டிக், நேம்போட், விளம்பரபோட் செய்து கொள்ள "வீமா" ஆனைப்பந்தி சந்தி யாழ்ப்பாணம். (தினசரி காலை 9 மணி முதல் 1. 30 மணிவரை) ஸ்தாபனம் இயங்குகின்றது. (13710)

மட்டக்களப்பில் எரிந்த நிலையில் சடலங்கள்

கொழும்பு, ஜூலை 12 மட்டக்களப்பு நகரப்பகுதியில் கடந்த ஞாயிறு மேலும் 8 சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அவற்றில் நான்கு சடலங்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன்னால் வெவ்வேறு இடங்களில் கிடந்தனவாம்.

கடந்த செவ்வாய்க்கிழமை நகரில் ஐந்து சடலங்கள் கிடந்தன என்பது தெரிந்ததே. (இ-எ)

கரை ஒதுங்கிய படகு

குருநகர், ஜூலை 12 பூநகரி - கல்முனைப் பகுதியில் இயந்திரப் படகொன்று கரை ஒதுங்கியது.

குருநகரில் ஒருந்து இடம் பெயர்ந்து அங்கே தங்கியிருக்கும் அகதிகள் அந்த படகை கரை சேர்த்து குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தனர். பஞ்சள், நீல நிற இந்தப் படகின் இலக்கம் 9161 படகில் இந்தியச் சில்லறை நாணயங்கள் இருந்தன என்றும் கூறப்படுகிறது. (இ-51)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

R. சிங்கராசா ஸ்ரனிஸ்லோஸ்

(இலங்கை சிறுவர் நலன் பாதுகாப்பு திணைக்களம்)

அன்பின் தெய்வமே!

உங்கள் பிரிவால் உள்ளம் உடைந்து கண்ணீர் ஊற்றுகின்றோம். உங்கள் அன்பின் உருவமும் சொல்லும் செயலும் எங்கள் இதயத்தில் என்றுமே இடம் பெற்றிருக்கும்.

பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், மருமகள், மைத்துனர், மைத்துனிமார், உறவினர்.

சென். அன்ரனிஸ் லேன், பண்டத்தரிப்பு. [13583]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு.

கிருஷ்ணபிள்ளை இராசரத்தினம்

தோற்றம்: 13-04-1937 மறைவு: 22-07-1989

திதி: 12-07-1990

ஆண்டு ஒன்று சென்றாலும்
மாறாத நினைவுடனே
மாநிலத்தில் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்.

வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை. (13715)

புலிகளும் இல்லை; ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் இல்லை

தமிழர் பிரச்சினை குறித்து இனிமேல் களிமண்ணுடனா பேச்சுவார்த்தை?

வாசுதேவ நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, ஜூலை 12 தமிழர் பிரச்சினை குறித்து நீங்கள் யாருடன் பேசப் போகிறீர்கள். தமிழர்களின் உருவத்தைக் களிமண்ணால் பிடித்து அதனுடனா பேசப் போகிறீர்கள்?

இவ்வாறு அரசாங்கத் தரப்பினரிடம் கேட்டார் இரத்தினபுரி மாவட்ட எம். பி. திரு. வாசுதேவநாணயக்காரா.

மாகாண சபைக் கலைப்பு திருத்தச் சட்ட மூலம் சம்பந்தமான விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடந்த போது திரு. நாணயக்காராவும் பேசினார். அப்போதே அவர் மேற்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

அவர் தமது பேச்சில் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுக்குப் பிரிந்து செல்லும் அதிகாரத்தை வழங்கினாலும் எமது கட்சி எதிர்க்காது. இதில் ஒரு சில கட்சிகளுக்கு முரண்பாடு இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு பிரிந்து செல்லும் அதிகாரம் வழங்குவதானாலும் நாம் அதனை ஆதரிப்போம்.

அவர் தமது பேச்சில் தொடர்ந்தும் கூறியதாவது;

கிழக்கில் இப்போது அமைதி நிலவுவதாக கூறுகிறீர்கள் அப்படியானால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஈ. பி. ஆர். எல். எவ்விடம் அப்பகுதிகளை ஒப்படைத்து அதை மீண்டும் இயங்கச் செய்யுங்கள். ஈ. பி. ஆர். எல். எவ். மாகாண முதல் அமைச்சர் வரதராஜப் பெருமாளை விரட்டியடித்தீர்கள். புலிகளுடன் 5 நட்சத்திர ஹோட்டலில் தேனிலவு அனுபவித்தீர்கள். ஈ. பி. ஆர். எல். எவ்வை பகைத்துக் கொண்டு புலிகளுடன் கூடிக் குலாவினீர்கள்.

இப்பொழுது உங்களுக்குப் புலிகளும் இல்லை.

அப்படியானால் தமிழர் பிரச்சினை பற்றி யாரிடம் பேசப் போகிறீர்கள்? களிமண்ணால் தமிழ் மக்களின் உருவத்தை செய்து வைத்து அந்தப் பொம்மையுடனா பேசப் போகிறீர்கள்?

இந்த திருத்தச் சட்ட மூலத்தால் நாட்டின் சனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்படும்.

இதன் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை வெளியேற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகிறது.

இது போன்ற நிலை நாளை இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்படலாம். ஏதோ ஒரு காரணத்தால் ஒரு எம். பியை நீக்க ஜனாதிபதி நினைத்தால் அவரை வெளியேற்றக் கூடிய அதிகாரம் வழங்குவதற்கு இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் முன்மாதிரியாக ஏற்படுத்தப்படுகிறது. இந்தச் சட்ட மூலம் சனநாயகத்துக்குச் சாவு மணி அடிக்கிறது என்றார்.

திரு. வாசுதேவ நாணயக்கார தமது பேச்சின் முடிவில் திருத்தச் சட்ட மூலப் பிரதியை கிழித்து எறிந்தார். (அ-9)

அறிவித்தல்

275, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த

நொதேன் ரெலிவிசன் சென்ரர்

தற்காலிகமாக
T. SIVAPALAN,
Post Office View, Manipay.

எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத் தருவதோடு எம்மிடம் திருத்த வேலைகளுக்காக தந்த மின் உபகரணப் பொருள்களை ஒரு கிழமைக்குள் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். பெற்றுக்கொள்ளாத இடத்து அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். (13717)

எமது அன்பான
வாடிக்கையாளர்களே! மாணவ மணிகளே!!!
ஆசிரியப் பெருந்தகையோரே!!

வாடிக்கையாளரின் நன்மை கருதி எமது புத்தக நிலையம் நல்லூர் சிவன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது என்பதை பணிவுடன் அறியத்தருகிறோம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை

நல்லூர், யாழ்ப்பாணம். (C/5260)

வைற் ஹவுஸ்

அந்திய கால சேவை

191, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் எந்நேரமும் திறந்திருக்கும்.
இங்கு வர முடியாத பட்சத்தில் கீழே குறிப்பிட்ட விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

★ வைற் ஹவுஸ் ★

செல்வ பவனம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
இந்துக் கல்லூரி முன்பாக [13595]

O. G. A.
CHUNDIKULI GIRLS' COLLEGE

The A.G.M. Fixed For
14 th July 1990
Has Been Postponed

Secretary. (13709)

பணிவான வேண்டுகோள்

20 - 06 - 1990 அன்று காலை 8 மணியளவில் சாவகச்சேரியில் இருந்து நல்லூர்நோக்கி வந்த பஸ்ஸில் நான் பிரயாணம் செய்தேன். பஸ் நல்லூரை அடைந்ததும் என்னுடன் பிரயாணம் செய்த நெடுந்தீவைச் சேர்ந்த பெண்ணிடம் எனது பாக்கை கொடுத்து விட்டு உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் அதனுள் முக்கிய ஆவணங்கள் உள்ளன. தயவுசெய்து

திருமதி மங்கயற்கரசி சௌந்தரராசா,
12ஆம் வட்டாரம் புங்குடுதீவு.

எனும் முகவரிக்கு கொண்டுவந்து தரும்படி வேண்டிக்கொள்கின்றேன். (13720)

அகதிகளுக்கு உணவு வசதி

ஓட்டுசுட்டான், ஜூலை 12 திருகோணமலை மாவட்டத்தில் இருந்து அளம்பில் பகுதிக்கு அகதிகளாக வந்தவர்களுக்கு அளம்பில் புனித அந்தோனியார் கோவிலில் 3 நாட்களுக்கு உணவு வசதி அளிக்கப்பட்டது.

அந்தோனியார் கோவில் பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய ஸ்ரலின் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (இ-113)

மீட்புநிதி விளக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12 தமிழீழ மீட்புநிதி விளக்கக் கூட்டங்கள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற உள்ளன.

ஆவரங்கால் பகுதிக்கு இன்று இராமலிங்கம் வித்தியாசாலையிலும், அச்சுவேலி தெற்கு பகுதிக்கு நாளை சரஸ்வதி வித்தியாசாலையிலும், அச்சுவேலி வடக்கு பகுதிக்கு 14 ஆம் திகதி அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

பனை அபிவிருத்திச்சபை
ஊழியர்களின் கவனத்திற்கு

தலைமையலுவலகத்திற்குச் சமுகமளிக்க முடியாத ஊழியர்கள் மீசாலை, வரணி, சிங்கைநகர், திக்கம், சுன்னாகம், கைதடி ஆகிய இடங்களிலுள்ள உற்பத்தி நிலையங்களில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

பொதுமுகாமையாளர்
பனை அபிவிருத்திச்சபை.

(சி/5259)

இடமாற்றம்

சித்திவினாயகர் ஸ்ரோர்ஸ்

234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கிழக்காணும் முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

பெ ன்னாலை வீதி, யாழ்ப்பாணத்தில்:
எழுமுள்ளி(தபால் கட்டை), 117,சிவப்பிரகாசம் வீதி
[9 km] மானிப்பாய். வண்ணார்பண்ணை.

எம்மிடம்
★ ஈக்குத்தடி, ★ தும்புத்டி
★ கயிறு வகைகளும்
பெற்றுக் கொள்ளலாம். (13718)

உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாடசாலைகளும் தனியார் கல்வி நிறுவனங்களும் மூடிக்கிடப்பதால் மாணவர்களது கல்வி பெருமளவு பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக க. பொ. த. (உயர்தரம்) '90 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பெரிதும் அல்லலுறுகின்றனர். இவர்களது நலன் கருதி யாழ்/றோட்டரக்ட் கழகத்தினர் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து 21ஆம் திகதி சனிக்கிழமை வரை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இக் கருத்தரங்கை நடாத்த உத்தேசித்துள்ளனர்.

மேற்படி கருத்தரங்கு முற்றுமுழுதாக மாணவர்களைப் பரீட்சைக்குத்தயார் செய்யும் நோக்குடன் துரித மீட்டல் வகுப்புகளையும் வினாவிடை வகுப்புகளையும் கொண்டிருக்கும். எவ்வித கட்டணமுமின்றி, பரீட்சைக்குத் தோற்றும் சகல உயர்தர மாணவர்களும், குறிப்பாக வெளிமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

றோட்டரக்ட் கழகத்தின் வேண்டுகோளுக்கமைய கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகளுக்குரிய பாடங்களை பிரபல ஆசிரியர்குழு சேவை நோக்குடன் பின்வரும் நேர அட்டவணைக்கமைய நடாத்த முன் வந்துள்ளது.

நேர அட்டவனை

ஜூலை 13—14 மு.ப. 9-12 வர்த்தகம் — ஜெயராமன்
பி.ப. 1- 4 தாவரவியல்— குகாதரன்

ஜூலை 16—17 மு.ப. 9-12 கணக்கியல் — ஸ்ரீ
பி.ப. 1- 4 விலங்கியல் — நாகநாதன்

ஜூலை 18—19 மு.ப. 9-12 பொருளியல்— வரதராஜன்
பி.ப. 1- 4 இரசாயனவியல் —தில்லைநாதன்

ஜூலை 20—21 மு.ப. 9-12 தூயகணிதம் / பிரயோககணிதம் } பிரேம்நாத்
பி.ப 1- 4 பௌதிகவியல் —அருள்தாசன்

[சி-5257]

அவசரகாலத்தில் சுகாதாரசேவைகள்

வாகனப்போக்குவரத்து இன்மையாலும், அகதிகள் கூடுதலாக முகாம்களில் சேரும் நிலைமையினாலும் எமது பிரதேசத்தில் (யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்கள்) சுகாதாரம் மிகவும் பாதிப்பு அடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே பின்வரும் ஒழுங்குகளைக் கையாளுமாறு வைத்திய நிலையப் பொறுப்பு அதிகாரிகளும் வெளிக்கள ஊழியர்களும் வேண்டப்படுகின்றார்கள்.

(1) வைத்திய நிலையங்களுக்குச் குழலில் உள்ள அகதி முகாம்களுக்குச் சகல நிலையப் பொறுப்பு அதிகாரிகளும் முடியுமான அளவு தினமும் தரிசிக்கும்படி வேண்டப்படுகிறார்கள். நடமாடும் மருத்துவ நிலையங்களுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை.

(2) வெளிக்கள ஊழியர்கள் அகதிமுகாம்களுக்குத் தினமும் விஜயம் செய்தல் வேண்டும். நோய் பரவும் சாத்தியக் கூறுகள் இருப்பின் எமது கவனத்திற்கு கொண்டுவரல் வேண்டும்.

(3) சுகாதார வைத்திய அதிகாரிகள் அகதிமுகாம்களுக்கும் வைத்திய நிலையங்களுக்கும் தரிசிப்பு மேற்கொள்ளல் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

(4) அத்தியாவசிய மருந்து தேவைப்படும் நிலையப் பொறுப்பதிகாரிகள் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் தமது பகுதியில் உள்ள அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தமது மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு வேண்டுகிறேன். கிழமைகள் தோறும் எமக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கவும்.

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.
11-7-90. (சி/5262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தமிழ் மாணவர் வேறு தேசத்தவரா?

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதி நடக்கும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பில் அறிவித்திருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கில் யுத்த நிலைமை நிலவுகிறது. யுத்தத்தை அரசாங்கமே உத்தியோக பூர்வமாகப் பிரகடனப்படுத்தியது. யுத்தத்தின் விளைவால் தமிழ்ப் பிரதேசங்கள் இரத்தம் தோய்ந்துள்ளன. அப்பாவிப் பொதுமக்கள் நிலைமை நீண்டு கொண்டு, தமிழ்ப் புலி எங்கும் பரவிக்கொண்டு போகிறது. மக்கள் பட்டினியால் சாகும் அவத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் இழி நிலையில் பாடசாலைகளில பாடபோதனை நடத்த முடியாது பாடங்களைக் கிரகிக்கக் கூடிய மனப்பலமும், உடற்பலமும் மாணவருக்கு இல்லை

எப்போது எங்கே வந்து ஷெல்லும், குண்டும் விழுந்து தலை வெடிக்குமோ என்ற பயப்பிராந்தியுடன், உளவளம் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவர்களால் எப்படி மனம் ஊன்றிப் படிக்க இயலும்?

இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் போல, கொழும்பில் உள்ள அதிகாரிகள் பரீட்சையைத் திட்டமிட்டபடி நடத்தப்போவதாகக் கூறுகிறார்கள். தெற்கில் ஜே. வி. பி. கலகம் நடந்த போது அங்குள்ள பாடசாலைகள் இயங்கவில்லை. அதனைக் காரணங் காட்டி ஜீ. சீ. ஈ. உயர்தர பரீட்சையை ஒத்திவைத்தார்கள் பரீட்சைப் பகுதியினர். ஆனால் இப்போது வடக்கு-கிழக்கில் நிலைமை சீரற்று இருக்கும் போது உயர்கல்விக்குப் பிரதானதடை தாண்டியாக விளங்கும் உயர்தர பரீட்சையை நடத்துக் கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

இதிலிருந்து புரிவது என்ன? தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் கொழும்பு அரசுக்கும், அதிகாரிகளுக்கும் அக்கறை இல்லை. தருணம் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் மாணவர்களைக் கல்வித்துறையில் கீழே தள்ளி வீழவுதற்கு அரசு காத்திருக்கிறது என்பது தான். இல்லையேல் வடக்கு - கிழக்கு வேறு தேசம் என்று அதிகாரிகள் நினைக்கிறார்களோ?

எழுபதுகளில் தரப்படுத்தலைக் கொண்டு வந்து பல்லாயிரக் கணக்கான தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்குத் தடை போட்ட சிங்களப் பேரினவாதம், கல்வித்துறையில் தமிழர்களைத் தருணம் பார்த்துத் தள்ளி விழுத்திவிடக் குழி பறித்து வைத்திருக்கிறது என்பதாகும்.

தமிழருக்கு ஒரு நீதி, சிங்களவருக்கு ஒரு நீதி என்பதே தமிழ் மாணவருக்கு ஒரு நீதி, சிங்கள மாணவருக்கு ஒரு நீதி என்று விசாவம் அடைகிறது. திட்டம் போட்டுத் தமிழர் கல்வியைப் பாழடிக்கும் அரசுக்கும், அதிகாரிகளுக்கும் இதுவும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகத்தெரிகிறது. அவ்வளவு தான்.

உயர்தரப் பரீட்சையை இரண்டு தடவைகள் நடத்த முடியாது. ஏனெனில் பல கலைக்கழக அனுமதிக்கான போட்டிப் பரீட்சையும் அதுவே. இவ்வருடப் பரீட்சை திட்டமிட்டபடி நடக்குமானால் ஆயிரக் கணக்கான தமிழ் மாணவரின் உயர்கல்வி மண்போட்டுப் புதைக்கப்பட்டு விடும்.

அந்த நடவடிக்கை, வடக்கு - கிழக்கு ஒரு தேசம், தெற்கும் மேற்கும் இன்னொரு தேசம் என்ற உணர்வை மாணவர்கள் மத்தியில் வளர்க்கும். கொழும்பு இது போன்ற செயல்களால் தானாகவே நாட்டை இரண்டாக்குகிறது என்பதை ஏனோ மறந்து விடுகிறது. இற்கு மேல வேறு என்ன அர்த்தமும் விளக்கமும் கொள்ள இயலும்?

வருடாந்த மகோற்சவம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 12

சாவகச்சேரி சுச்சாய் வீதி சந்தண முதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 12 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்.

20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தமும் இடம்பெறும். (இ-117)

முகாம்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 12

மாலிப்பாய் பகுதியைச் சேர்ந்த அகதி முகாம்களுக்கு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று முன் தினம் விஜயம் செய்து அங்குள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்தார். (இ-3)

மருந்துத் தட்டுப்பாடு:

யாழ் - கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 67 வைத்தியசாலைகளிலும் மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள பிரத்தியசட்கர் திரு. எள். கனகசபை இதனைத் தெரிவித்தார்.

தற்பொழுது முக்கிய மருந்து வகைகளுக்கு பெரும் அளவில் தட்டுப்பாடு நிலவுவதாகவும் ஏனைய மருந்து வகைகள் இரண்டு வாரத்துக்கு மட்டுமே போதுமானவை என்று அவர் தெரிவித்தார்.

ஒக்சிசன் சிலிண்டர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விசர் நாய்க் கடி மருந்து துப்புரவாக இல்லாததால் சிலர் விசர்நாய்க் கடியினால் இறந்து விட்டனர்.

மருந்துத் தட்டுப்பாடு குறித்து செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. போதியளவு மருந்து வகைகள் வந்து சேருவதில் தாமதம் ஏற்படுமானால் நோயாளிகளுக்கு உயிராபத்தும் ஏற்படலாம்.

இப்படி அவர் கூறினார். இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலை மூடப்பட்டதன் காரணமாக பல நோயாளர்கள் கிராமப்புற வைத்தியசாலைகளை நாடுகின்றனர்.

கிராமப்புற வைத்தியசாலைகளில் தற்போது நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (இ-10)

மினி பஸ் கூட்டணம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 12

சாவகச்சேரியிலிருந்து முத்திரைச் சந்தை வரையான மினிபஸ் கூட்டணமாக ரூபா பதினைந்து அறவிடப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

கட்டண உயர்வால் இடம் பெயர்ந்து வருபவர்களும் பாதிக்கப்படுகின்றனர். (இ-117)

அகதிகள் வள்ளங்களை கடற்படையினர் தடுத்தனர்

கொழும்பு, ஜூலை 12

சுமார் 700 இலங்கைத்தமிழ் அகதிகளுடன் தமிழகம் சென்று கொண்டிருந்த ஆறு வள்ளங்களை இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் வைத்து தடுத்து நிறுத்தினர்.

விசாரணை நடத்திய பின்னர் அனைவரையும் மீண்டும் பேசாலைக்கு திரும்பச் செல்லும்படி அவர்கள் உத்தரவிட்டனர். என்று அறிவிக்கப்பட்டது. (அ-எ)

தட்டுப்பாடு

கொக்குவில், ஜூலை 12

கொக்குவில் பகுதியில் தவிட்டுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-69)

உணவுப்பொருள் அனுப்புமாறு

முல்லைத்தீவு - கிளிநொச்சி அரச அதிபர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் உடனடியாக உணவுப்பொருள்களை அங்கு அனுப்புமாறும் அந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு நேற்று அவசர கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் விடுத்துள்ள கோரிக்கையில், யுத்த நிலைமை ஏற்பட்ட பின் எந்த வித உணவுப் பொருளும் எமது மாவட்டத்துக்கு அனுப்பப்படவில்லை. உடனடியாக மா, சீனி, ஆகியவற்றை அனுப்புமாறு கேட்டுள்ளார்.

முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் விடுத்துள்ள கோரிக்கையில், எமது மாவட்டத்து மக்களுக்கே உணவு இல்லை. அதே நேரம் 30 ஆயிரத்துக்கு மேல் அகதிகள் வந்துள்ளனர். உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அவசரமாக உணவுப் பொருள்களை அனுப்புமாறு கேட்டுள்ளார். (இ-3)

கிளிநொச்சிப் பகுதியில் பல பாடசாலைகள் மூடப்பட்டன

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் மாணவர் வரவு இல்லாததாலும், பாதுகாப்புக் கருதியும் மூடப்பட்டு உள்ளன.

இயங்கி வரும் பாடசாலைகளிலும், மாணவர் ஆசிரியர் வரவு மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது.

இதுவரை கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி, கனகபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன விமான குண்டு வீச்சுக்கு இலக்காகின. தர்மபுரம் மகாவித்தியாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் மாணவர்களும், ஆசிரியர்களும் காயம் அடைந்தனர். பாடசாலைக்கட்டடமும் பலத்த சேதம் அடைந்தது. [இ-76]

முல்லைத்தீவு முகாம்களை பார்வையிட்டார்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின்வைத்திய நிவாரண வேலைகளுக்கு பொறுப்பான அதிகாரியான செல்வி. எலிசபெத் முல்லைத்தீவில் உள்ள அகதி முகாம்களைப் பார்வையிட்டார்.

யாழ் செஞ்சிலுவைச் சங்க வைத்தியக் குழுவுடன் சிலர் அங்கு சென்றிருந்தனர். (இ-3-9)

படகுகளில் தமிழகம் செல்லும் அகதிகளைச் சுட உத்தரவு?

மன்னார் பேசாலைப் பகுதியிலிருந்து அகதிகளாக இந்தியாவுக்குச் செல்லும் அகதிகளைச் சுடும்படி கடற்படையினருக்கு ஸ்ரீலங்கா அரசு உத்தரவு வழங்கியுள்ளதா?— இப்படி ஒரு சந்தேகம் தற்போது கிளப்பப்பட்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தியா நோக்கிப் புறப்பட்ட அகதிகள் வள்ளத்தை வழிமறித்த கடற்படையினர் அதில் பயணம்செய்தவர்களை மன்னார் அரச அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அந்த நிகழ்ச்சியின் போதே இந்தியாவுக்குச் செல்லும் அகதிகளைச் சுடும்படி அரசதங்களுக்கு உத்தரவு வழங்கியிருப்பதாக கடற்படையினர் தெரிவித்தனராம்.

இதேவேளை— மன்னார் மார்க்கமாக தமிழகத்துக்குச் செல்லும் ஈழ அகதிகளின் எண்ணிக்கை தினசரி அதிகரித்து வருவதாகக் கூறப்பட்டது. திருமலை அகதிகளும் மன்னார் சென்று அங்கிருந்து தமிழகம் போவதாக அறியவந்தது. [உ-3-9]

5 கோடி ரூபாவைத் தாண்டியது

கொழும்பு, ஜூலை 12

இலங்கை அரசு ஆரம்பித்த தேசிய பாதுகாப்பு நிதி 5கோடி20 லட்சம் ரூபாவைத் தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ-எ)

கசிப்பு வேட்டை

பச்சிலைப்பள்ளி, ஜூலை 12

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்க திடீர் பரிசோதனை உத்தியோகத்தர்கள் தமது பகுதியில் நான்கு இடங்களில் கசிப்பு வேட்டை நடத்தி கசிப்பு காச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களையும் கைப்பற்றினர்.

அத்துடன் வீடுகளில் கள் விற்பனை செய்த இருவரையும் இவர்கள் கண்டு பிடித்தனர்.

இவர்கள் வீடுதலைப் புலிகளின் விஸ்தரிப்பு அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டதாக சங்க பொது முகாமையாளர் வேதிருஷ்ணன் தெரிவித்தார். (இ-117)

கிழக்கின் இன்றைய நிலை

கொழும்பு, ஜூலை 12

கைது செய்யப்பட்டவர்களை காணவில்லை என்ற அவலம் ஒருபுறம் கைது செய்யப்பட்டவர்கள் கொல்லப்பட்டு விட்டார்களோ என்ற ஓலம் மறுபுறம். இதுதான் கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை ஆகும்.

இப்படிதிகாமடுல்ல எம்.பி. திரு திவ்யநாதன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நடத்தப்படும் தேடுதல் வேட்டையினால் சாதாரண மக்களே பாதிக்கப் படுகிறார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுக்கும் விமானத் தாக்குதலுக்கும் அப்பாவி மக்களே பலியாகின்றனர் என்றும் அவர் தமது அறிக்கையில் குற்றம் சாட்டி உள்ளார். (இ-எ)

அம்பாறையிலிருந்து தமிழர்களை முற்றாக அகற்றவே கலவரம்!

தூண்டிவிடப்பட்ட ஒன்று என்கிறார் அரச ஊழியர்

'அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்மக்களை முற்றாக அங்கிருந்து அப்புறப்படுத்தும் நோக்குடனேயே இம்முறை இனக்கலவரம் அங்கு கட்டவிழ்த்து விடப்பட்டது. படையினர் வேடிக்கை பார்த்துக்கொண்டுநிற்க, காடையர்கள் தமிழர்களைக் கொலை செய்யும் சொத்துக்களை அழித்தும் அட்டூழியம் புரிந்தனர்'

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற இனக்கலவரம் குறித்து, அங்கிருந்து உயிர் தப்பி வந்த அரச ஊழியர்ஒருவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

கடந்தமாதம் 12ஆம் திகதி புலிகளிடம் சரணடைந்த அம்பாறையைச்சேர்ந்த சிங்களப் பொலீஸார் கொல்லப்பட்டார்கள் என்ற வதந்தியே கலவரம் ஆரம்பிக்கக் காரணமாகும்.

பொலீஸ்காரர் வேடிக்கை பார்த்துநிற்க காடையர்களால் கலவரம் தூண்டிவிடப்பட்டது.

இ. சி. சி வாடியில் குடியிருந்த நகரசுத்தித் தொழிலாளர்கள், நகரசபை ஊழியர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்கள் மயானத்தில் போட்டுக் கொழுத்தப்பட்டன.

விமானநிலைய வீதியிலும் ஆண்கள் சிலர் டயர் போட்டுக் கொழுத்தப்பட்டனர்.

அரச ஊழியர்களான யோகேஸ்வரன் (நில அளவைப்பகுதி), குறூஸ் (பெருந்தெருக்கள் பகுதி), ஆகியோரும் மற்றும் ஒரு பொறியியலாளரும் உட்படப் பல ஊழியர்கள் கொல்லப்பட்டனர்.

ஹிங்குரானை சீனித் தொழிற்சாலையில் கடமை பார்த்த வடிவேலு (40 வயது) என்பவர் உயிருடன் நெருப்பில்போட்டுக் கொழுத்தப்பட்டார்.

உயிருடன் நெருப்பில் போடப்பட்ட கச்சேரியைச் சேர்ந்த சாரதிஒருவர் பின்னர் படுகாயமுற்ற நிலையில் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில்சேர்க்கப்பட்டார்.

அரசாங்க ஊழியர்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் அம்பாறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர் மேலும் நூற்றுக்கு அதிகமானோர் காணாமற் போயுள்ளனர். அவர்கள் பற்றி எந்தவித தகவலும் இல்லை.

அம்பாறை மாவட்டத்தின் எல்லைக்குள் இருந்து தமிழர் எவரும் வெளியே செல்ல அனுமதிக்கக்கூடாது என்றும் –

அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றும் – கொழும்பிலிருந்து படையினருக்கு உத்தரவு வந்ததாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்துச் சில சிங்களவர்கள் தாம் பாதுகாப்பும் புகலிடமும் அளித்திருந்த தமிழ்நண்பர்களைக் காட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய் அங்குபாதுகாப்பான இடங்களில்விட்டனர்

அம்பாறையில் நீண்டகாலமாக ஆஸ்பத்திரி நடத்தி வந்த புலோலியைச் சேர்ந்த நடராசா என்பவரின் ஆஸ்பத்திரியும் அங்கிருந்த பெறுமதிமிக்க வைத்திய உபகரணங்களும் நாசமாக்கப்பட்டுள்ளன.

இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ்க்கடைகள், வீடுகள் எரிகக்பட்டன.

மட்டக்களப்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்து அம்பாறைக்கு பஸ்களில்வந்து இறங்கியவர்கள்கூட பல்நிலையத்தில் வைத்துக்கொல்லப்பட்டனர்.

அங்கு அமைச்சர் தயாரத்தினா 15ஆம் திகதி வந்தார். அதன்பின்னரே ஓரளவு அமைதி ஏற்பட்டது.

படையினரின்அசிரத்தையே காடையர்களின் இந்த நாச வேலைகளுக்குக் காரணம் என்று ஒரு அரசாங்க ஊழியர் கூறினார். (உ-3)

முல்லைத்தீவு வங்கி ஊழியர்

யாழ்ப்பாணம், ஜூலை 12

முல்லைத்தீவு இலங்கை வங்கி ஊழியர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை9.00 மணிக்கு யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் உள்ள 842ஆம்இலக்கத்தில் சந்திக்குமாறு பிராந்திய முகாமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வட மாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்க விசேஷ பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ)

எழுதுவினைஞர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 12

வெளி மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அரசாங்க எழுதுவினைஞர்களின் நிலை குறித்து ஆராய நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் கூட்டம் ஒன்றை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கூட்டியுள்ளது. (இ-3)

இந்துக்கல்லூரி மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். இந்துக் கல்லூரி மாணவ முதல்வர்கள், சாரணர்கள், சென். ஜோன் முதலுதவிப்படைஉறுப்பினர்கள், செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர்கள், உயர் வகுப்பு மாணவர்கள் ஆகியோர் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் கூடுமாறு கோரப்படுகின்றனர்.

ஏற்கனவே பொதுச்சேவையில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளத் தேவையில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

வாகனத்தை நோக்கி சூடு

பச்சிலைப்பள்ளி, ஜூலை 12

பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த எல்வாகனங்களை நோக்கி ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

செவ்வாய் இரவு பளைக்சார் வெளிச்சந்தியிலும் மிருசுவிலிலும் இச் சம்பவங்கள் இடம் பெற்றன. (இ-117)

நிவாரணப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்- உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பத்திரம் இன்று முதல் வழங்கப்பட இருக்கிறது. [இ-3]

மட்டுநகரில் 36 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 12

மட்டக்களப்பு சிறைச்சாலை முகாமில் பாதுகாப்புப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 36 பேர் கடந்த திங்கள் விடுதலை செய்யப்பட்டனர். [உ-எ]

ஆங்கில பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு யாழ்- இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றுவந்த ஆங்கில பயிற்சி வகுப்புக்கள் நல்லூர் சாதனா பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

45 எம்.பிக்கள்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பி. தெய்வரம், எம். அருணாசலம், எஸ். திருநாவுக்கரசு, முன்னாள் நாடாளுமன்ற உபசபாநாயகர் எஸ். தர்மலிங்கம், சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி. கே. மூப்பனார், ஆகியோருட்பட பலர் கையெழுத்திட்டிருக்கின்றனர். (உ-எ)

விவசாய கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

போர்க்கால விவசாய உற்பத்தி, அபிவிருத்தி திட்டம் சம்பந்தமான கருத்தரங்குகள் கிராமங்கள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

மானிப்பாயில் நடைபெற்ற கலந்துரையாடலில் சனசமூக விவசாய சங்கங்கள் கலந்து கொண்டன. கிராமிய உற்பத்திக் குழுவுக்கான அங்கத்தவரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

குடாநாட்டிற்குள்ளான தபாற் சேவையை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அதனையொட்டி யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்தில் பணிபுரியும் பிரதம தபால் அதிபர் மற்றும் அங்கு பணிபுரியும் சகல ஊழியர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்துக்கு சமூகம் தருமாறு மாகாண அத்தியட்சகர் திரு எஸ். எம் சேதுகாவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

மாகாண----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி. வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்யலாம்.

சுயேச்சைக் குழுக்களிடம் இருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வைப்புப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும். (அ-எ)

வி. பி. சிங்- - -

[1 ஆம் பக்கத் தொர்ச்சி]

டார்.

திரு. கருணாநிதி மேலும் சொன்னதாவது;

இலங்கை இராணுவ தாக்குதலால் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

வீடு, வாசல் அனைத்தையும் இழந்து பல்லாயிரக் கணக்கில் இலங்கைத் தமிழர் அகதிகளாக தமிழகத்துக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்

இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு தமிழீழத்தில் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்குரிய வழி வகைகள் பற்றித்தான் நாம் யோசிக்க வேண்டும்.

தமிழீழத்தில் நிரந்தரமான, நிலையான அமைதி தேவை என எனது கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் கோரி வந்திருக்கிறது.

தமிழீழத்தை வலியுறுத்தாமல் வடக்கு, கிழக்குப் பகுதிகள் மாநில சுயாட்சியோடு விளங்கவேண்டும் என்று எனது கட்சி கோரி வந்தது

தி. மு. க. திணிக்கவில்லை

தனித் தமிழ் ஈழம் என்பதை ஈழத்தமிழ் மக்கள் மீது திராவிட முனனேற்றக் கழகம் எந்தக் காலத்திலும் திணிக்க விரும்பியது இல்லை.

இதனை எழுத்து மூலம் வலியுறுத்தி வந்திருக்கின்றேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டுமல்லாது, எல்லாப் போராளிக் குழுக்களுடனும் எனக்கு அனுதாபம் உண்டு.

ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் அனைவரும் ஒன்றுபடிருக்க வேண்டும். அவர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபடுகின்ற சிலரிடம் அவர்கள் பலியாகிவிடக் கூடாது என்பதை வேண்டுகோளாகவும் எச்சரிக்கையாகவும் பலமுறை விடுத்திருக்கின்றேன்.

இப்போது கூறமுடியாது

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றோ அல்லது அனுப்ப வேண்டாம் என்றோ நான் இப்போது அறுதியிட்டுக் கூறமுடியாது.

நிலைமைகள் எப்படி உருவாகின்றன என்பதைப் பொறுத்து காலம்தான் இதனைக் கணிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு திரு. கருணாநிதி செய்தியாளரிடம் சொன்னார்.

திரு. கருணாநிதியுடன் மத்திய நகர்ப் புற வளர்ச்சி அமைச்சர் முரசொலிமாறன் புதுவை மாநில முதலமைச்சர் டி. இராமச்சந்திரன் ஆகியோரும் செய்தியாளர் மாநாட்டில் பங்கு பற்றினர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English
ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.
விபரங்கட்கு:
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

உதயன்

12 - 7 - 1990 வியாழக்கிழமை

Method of Book-keeping
கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும் ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.
விபரங்கட்கு:-
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX, 162. COLOMBO, SRI LANKA.

வடக்கில் உணவுப் பற்றாக்குறை இல்லை என கூறுகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 12
வடமாகாணத்தில் உணவுப் பற்றாக்குறை நிலவுவதாக வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் குறித்துத்தான் கவலை அடைவதாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தெரிவித்திருக்கிறார். அங்கு உணவுப் பற்றாக்குறை இல்லை என்றும் அவர் கூறினார்.

மூன்று தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வடக்கின் உணவுப் பற்றாக்குறை குறித்து முறையிட்டபோதே அவர் இவ்வாறு சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. மாலை சேனாதிராஜா, டாக்டர் நீலன் திருச்செல்வம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. குமார் பொன்னம்பலம் திரு. மோதிலால் நேரு, ரெலோ எம். பி. திரு. திவ்யநாதன், திரு. பி. கணேசலிங்கம் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் சாகுல் ஹமீது, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிரில் ரணதுங்க, பொலீஸ்மா அதிபர், முப்படைகளின் தளபதிகள், உணவுத் திணைக்கள ஆணையாளர், சர்வதேச விவகார ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யுத்தம் காரணமாக பொது மக்களுக்கான உணவு விநியோகம் சீர்குலையக் கூடாது என்பதில் அரசு அக்கறையாக உள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

வடமாகாணத்தில் உணவுப் பற்றாக்குறை இருப்பதாகவும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகள் பற்றி தான் கவலை அடைந்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு உணவுப்பற்றாக்குறை இல்லை. அவசியம் ஏற்படின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் யாருக்கு உணவுப்பொருள்கள் தேவை என்று கருதப்படுகிறதோ அவர்களுக்கு அவை கிடைக்கச் சகல முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள் விநியோகத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் விசேட லொறி வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி பணித்தார்.

கடல்மார்க்கமாக உணவுப் பொருள்களை காங்கேசன் துறைமுகத்திற்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. பிரேமதாஸா சொன்னார். (அ-எ)

164 பேர் உறவினர் பற்றி விவரம் கோருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வெளிமாவட்டங்களிலுள்ள தமது உறவினர்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுத்தருமாறு 164 பேர் நேற்றுவரை செயலகத்தில் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

செயலக அதிகாரிகள் இந்த விவரங்கள் அடங்கிய பட்டியல்களைச் செஞ்சிலுவைச்சங்கத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்கம் இது பற்றிய விவரம் தெரிவித்த பின் பத்திரிகை வாயிலாக அறிவிக்கும் என்று செயலக அதிகாரி தெரிவித்தார். [இ-3]

தினமும் 1,000 பேர் வரை தமிழ்நாடு செல்கின்றனர்

சென்னை, ஜூலை 12
இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் சராசரி ஆயிரம் பேர் வீதம் தினசரி தமிழகம் வந்து கொண்டிருக்கின்றனர்.

இப்படி தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

மத்திய அரசின் உதவியுடன் இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரிக்கும் பணியை தமிழக அரசு மேற்கொண்டு உள்ளது.

1983 இல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து 40ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் படகுகள் மூலம் தமிழ்நாடு வந்தனர்.

அதன் பின்னர் இப்போது அகதிகள் பெருமளவில் வரத் தொடங்கியுள்ளனர்.

இப்படி திரு.கருணாநிதி தெரிவித்தார்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் 758 குடும்பங்களைச்சேர்ந்த 3,156 பேர் இலங்கையில் இருந்து இராமேஸ்வரம் சென்றடைந்தனர் என்று சென்னையில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

ஈழ அகதிகள் மறுவாழ்வு; கண்காணிக்க உயரதிகாரி

தமிழகத்தில் தஞ்சம் புகும் ஈழத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வு பணிகளைச் செயற்படுத்த உயர் அதிகாரி ஒருவரைத் தமிழக அரசு நேற்று நியமித்தது.

மறுவாழ்வு ஆணையாளர் திரு. சி. எம். இராம்தாஸ் இத்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கார். [உ-எ)

மன்னார் அரச ஊழியரை வேலைக்கு திரும்ப அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை12
மன்னார் மாவட்டத்தில் அவில் நிர்வாகத்தைக் கொண்ட ஒரு சகல அரச ஊழியர்களையும் உடன் வேலைக்கு திரும்புமாறு மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செயநாதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னாரில் மின்சாரம், நீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய சேவைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. வங்கிகள் இயங்காத காரணத்தால் பணப்புழக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். குடும்ப உறுப்பினருக்கு நஷ்டஈடு

கோடம்பாக்கம் சம்பவத்தில் கொலையுண்ட ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர்களில் ஏழு பேரின் குடும்பங்களுக்கு 75 ஆயிரம் ரூபாமுதல் ஒரு லட்சம் ரூபா வரையான நஷ்ட ஈடுப்பணத்தைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.

அச்சம்பவத்தில் காயமடைந்த 22 பேருக்கும் நஷ்டஈட்டுப் பணம் வழங்கப்பட்டதாகவும் சென்னையில் நேற்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

ராணுவ வாகனங்கள் மீது பாலம்பட்டாறில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 12
பாலம்பட்டாறில் வைத்து இராணுவ வண்டித் தொடர் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தியதில் வண்டித் தொடரில் முன்னால் வந்த ''லாண்ட் றோவர்'' ஜீப் முற்றாகச் சேதமுற்றது. அடுத்து வந்த டிரக் பாலத்தில் புரண்டது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து திருமலை நோக்கி வந்த வண்டித் தொடர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

வீதியில் நின்றோர் மீது சரசாலையில் ஹெலி சூடு

பச்சிலைப்பள்ளி, ஜூலை 12
வீதியில் நின்று பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி ஹெலி சுட்டது.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7-00 மணியளவில் சரசாலையில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது எவரும் காயம் அடையவில்லை. 3 வீடுகள் சிறிது சேதமடைந்தன. [இ-117]

கல்முனையில் செவ்வாய் 31 தமிழர் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 12
கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனைப் பகுதியில் ஸ்ரீலங்கா படையிரும் ஜிகாத் அமைப்பைச் சேர்ந்தவர்களும் இணைந்து 31 தமிழர்களை வெட்டிக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

டாக்டர் சண்முகநாதன் என்பவரும் அவரது மனைவியும் உயிரிழந்தவர்களில் அடங்குவர்.

உயிரிழந்த இளம் பெண்களில் ஒருவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. [உ]

மன்னார்- முருங்கன் வீதியில் 64 வீடுகள், 32 கடைகள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
மன்னார்- முருங்கன் வீதியில்படையினரின் அத்துமீறிய [illegible] 64 வீடுகளும் 32 கடைகளும் எரித்து [illegible] 20 வீடுகள், 10 க்கும் மேற்பட்ட கடைகள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

இக்பால் ஆஸ்பத்திரி, முருங்கன் ஆஸ்பத்திரி, சந்தைக் கட்டடம், அரிசிஆலை, [illegible] பொருள் நிலையம் என்பவை எரிக்கப்பட்டுள்ளன. (உ-9]

கொழும்புத் துறைமுகத்தில் பாகிஸ்தான் யுத்தக் கப்பல்

பாகிஸ்தான் கடற்படையைச் சேர்ந்த இரண்டு யுத்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்றன.

இக்கப்பல்களில் வந்த பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகள் கொழும்பில் இலங்கைக் கடற்படை உயர் அதிகாரிகளைச் சந்தித்தனர்.

இந்திய அமைதிப்படை வெளியேறிய பின்னர் நான்கு பாகிஸ்தான் யுத்தக்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துசென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

அவை யுத்த கப்பல்கள் அல்ல வெளியுறவு அதிகாரி தகவல்

கொழும்பு, ஜூலை 12
கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இரண்டு பாகிஸ்தான் கப்பல்கள் யுத்தக்கப்பல்கள் அல்ல.

இப்படிவெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

சீனா சென்றுவிட்டு திரும்புகையிலேயே இந்த இரண்டு கப்பல்களும் கொழும்புத் துறைமுகம் வந்துள்ளன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். [உ-எ]

காரைநகரில் நேற்று கடுமையான மோதல்

காரைநகர், ஜூலை 12
நேற்றுக் காலை 6. 30மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது

சுமார் 45 நிமிடம் வரை இச் சண்டை நீடித்தது. விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலை அடுத்து படையினர் முகாமுக்குப் பின்வாங்கினர். இம் மோதலில் இரண்டு கடற்படையினர் உயிரிழந்ததாக கூறப்பட்டது. எனினும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இதேவேளை கோவளம் கடற்பிரதேசத்திலிருந்து பீரங்கிக் கப்பலிருந்து சுமார் 50 வரையிலான பீரங்கி வேட்டுக்கள்தீர்க்கப்பட்டன அவை பெரும் சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன. (அ-ரி)

கொலையுண்ட

நோயாளியை விரட்டிய குண்டர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12
புற்றுநோயால் அவதிப்பட்ட நோயாளியை ஆஸ்பத்திரியிலிருந்து விரட்டிய குண்டர்கள் வளவுக்குள் நின்றால் வெட்டிக் கொலைசெய்வோம் என்று எச்சரித்தனராம்.

கொட்டடியைச் சேர்ந்த சி. விநாயகர் என்பவர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு மகரஹம ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தார்.

இவருக்கு உதவியாக அவரது இரு மகள்மாரும் மற்றுமொருவரும் இருந்தனர்.

குண்டர்களின் எச்சரிக்கையை அடுத்து ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறி கதிரேசன்கோவில் அகதி முகாமில் இவர்கள் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் நிலைகுறித்துஅறிந்து தகவல் தருமாறு உறவினர்கள் அரச அதிபரிடம்கேட்டுள்ளனர். (இ-3)

இன்ரறக்ட் உறுப்பினருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ''இன்ரறக்ட்'' உறுப்பினர்களை இன்று வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு தத்தமது பாடசாலைகளில் சமூக மளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அங்கு ஆசிரிய ஆலோசகரைச் சந்தித்து அகதிகளுக்கான நிவாரணப் பணிகளைச் செயற்படுத்துவது [illegible] மாக கலந்தாலோசிக்குமாறு யாழ். ரோட்டறிக்ட் [illegible] வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ)

"வலம்புரி" படகை படையினர் பறித்தனர்

நெடுந்தீவு, ஜூலை 12
குறிகட்டுவான் - நெடுந்தீவு போக்குவரத்து சேவைக்கு என புதிதாகத் தருவிக்கப்பட்ட ''வலம்புரி'' படகை படையினர் பவவந்தமாக எடுத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கள் இடம்பெற்றது.

குறிகட்டுவானிலிருந்து பயணிகளுடன் புறப்பட்ட இந்தப் படகு நயினாதீவில் சோதனைக்காக நிறுத்தப்பட்டது.

அவ்வேளை படையினர் பயணிகளை படகில் இருந்து இறக்கிவிட்டு படகோட்டி. அவரது உதவியாளர் ஆகியோருடன் படகை எடுத்துக் கொண்டு காரைநகருக்குச் சென்றனர்.

படையினரால் கொண்டு செல்லப்பட்ட இருவருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

''வலம்புரி'' படகு பறிமுதலானதை அடுத்து குறிகட்டுவான் - நயினாதீவு படகுச் சேவை ஸ்தம்பிதமடைந்தது.

படையினரால் நயினாதீவில் இறக்கப்பட்ட பயணிகள் பின்னர் புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க படகில் நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தப்படகு நெடுந்தீவு துறைக்கு அருகே நெருங்கிய சமயம், அதனை நோக்கி நடுக்கடலில் தரித்து நின்ற கடற்படைப் படகு ஒன்றில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனால் பீதியடைந்த பயணிகள் கடலில் இருந்து குதித்து கரையைநோக்கி நீந்த தொடங்கினர். நீச்சல் தெரியாதோர் பீதியினால் ஓலமிட்டனர். பின்னர் படகு ஒருவாறு துறைக்குக் கொண்டு சென்று நிறுத்தப்பட்டது. (உ-111)

கொழும்பில் சிக்கி இருந்த 1000 பேர் யாழ். திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூலை 12
கொழும்பில் சிக்கியிருந்த சுமார் ஆயிரம் தமிழர்கள் லொறிகள் மூலம் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

செவ்வாய்க்கிழமை காலை கொழும்பிலிருந்து 14 லொறிகளிலும், ஒரு பஸ்ஸிலும் இவர்கள் புறப்பட்டனர்.

துணை அமைச்சர் திருமதி. இ. புலேந்திரனின் ஏற்பாட்டில் பொலீஸ், இராணுவ பாதுகாப்புடன் வவுனியா வரை இவர்கள் வந்ததாகக் கூறப்பட்டது. எனினும் செட்டிகுளம், யக்காவ முகாம்களுக்கு அருகில் வந்து இந்த லொறிகள் மீதும், பஸ் மீதும் கல்வீச்சு இடம் பெற்றதாகவும் கூறப்பட்டது. [இ-3-117]

யாழ்ப்பாண முஸ்லிம்சள் இக்கிரிகொலாவ முகாமில்

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ் - மாவட்டத்தில் இருந்து இடம் பெயரும் முஸ்லிம்களுக்கு இக்கிரிகொலாவ என்னும் இடத்தில் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்துக்கும், மதவாச்சிக்கும் இடையில் உள்ள இந்த இடத்தில் இங்கிருந்து சென்றுள்ள முஸ்லிம்கள் தங்கியுள்ளனர்.

மற்றொரு பகுதி முஸ்லிம்கள் யாழ் - நகரப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வேலணை வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசலில் அமைத்துள்ள முகாமில் தங்கியுள்ளனர்.

மதவாச்சியால் செல்ல முஸ்லிம் மக்களை இராணுவத்தினர் தாராளமாக அனுமதிக்கின்றனர் இதனால் பஸ்கள் மூலம் முஸ்லிம்கள் பெரும் அளவில் சென்ற வண்ணம் உள்ளனர். (இ-3)

வானொலியில் யாழ். சேவை!

கொழும்பு, ஜூலை 12
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணச்சேவை ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்திருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

மேலும் 700 தமிழ் அகதிகள்

திருநெல்வேலி கட்டப்பொம்மன் மாவட்டத்தில் மேலும் 700 இலங்கைத் தமிழ் அகதிகள் அடுத்த இரண்டு தினங்களில் தங்க வைக்கப்படுவர்,

ஏற்கனவே 316 இலங்கைத் தமிழ் அகதிகள் இம்மாவட்டத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். [இ-எ]

கல்முனையில் அதிரடிப் படையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 12
விசேடஅதிரடிப்படையினர் கல்முனை வாடி வீட்டில் புதிய முகாம்ஒன்றை அமைத்துள்ளனர்.

அருகில்இருந்த தமிழர்களின் பலவீடுகள் படையினரால் எரிக்கப்பட்டுள்ளன. (உ)

வயாவிளானில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 12
நேற்றுக் காலையில் வயாவிளானூடாக வெளியேறமுற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் மேற்கொண்டனர். இராணுவத்தினர் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றனர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. சேதவிவரம் பற்றித் தெரியவரவில்லை. [உ-எ]

ஸ்ரீலங்கா---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சேதத்திற்குள்ளாகியது.

கரும்புலிகள் மூவரும் வீர மரணமடைந்தனர். அவர்களுக்கு வீர அஞ்சலி செலுத்தி விடுதலைப் புலிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

வல்வைக் கடற் பிரதேசத்தில் தரித்து நின்று குடிமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வந்த யுத்தக் கப்பல்களில் சேதமுற்ற இந்தக் கப்பலும் ஒன்று எனக் கூறப்படுகிறது: (உ-9]

பல்கலை----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மாணவிகள் கலந்துகொண்ட இந்த ஊர்வலம் பல்கலைக் சமூக வாசலில் ஆரம்பித்து செயலகத்தில் முடிவடைந்தது.

ஊர்வல முடிவில் மாணவர் மகஜர் ஒன்றை அரச அதிபரிடம் கையளித்தனர்] (இ 3-10.

உணவுப்--.

(1 ஆம் பக்கத் தெடேர்ச்சி)
அதிகாரிகளான திரு. றூபியும், திரு.பீற்றர் ஏக்கவுவ்வும் சென்றனர்.

லொறிகளை அனுப்பும் வேலைகளை யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், செயலக பொதுசனதொடர்பு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ஐ. நித்தியராஜ் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். (இ-3-9)

ஓராண்டு நினைவஞ்சலி

திரு. வில்லியம் ஜெயராஜா

(நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம்)

ஆண்டவன் படைப்பு: 20 - 04 - 1949
அந்நியர் அழிப்பு: 12 - 07 - 1989

''வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அழிக்கப்படுவதில்லை''

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய் எம் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புத் தெய்வமே. எம்மை எல்லாம் ஆறாத்துயரில் தவிக்க விட்டு மீளாத் துயில் கொண்டு விட்டாயே. என்றும் உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் பரிதவிக்கும்
அன்பு மனைவி, மகள்,
பெற்றோர், சகோதரர், உறவினர்கள்.

சில்லாலை. [13719]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org